தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மாசி 27, விசு - திருவள்ளுவர் ஆண்டு-2033
2002 மார்ச் 11, திங்கட்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு."

இறப்பு எனப்படுவது ஒருவனுக்கு உறக்கம் வருதலைப் போன்றது; பிறப்பு எனப்படுவது உறக்கம் நீங்கி விழித்துக்கொள்வதைப் போன்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. இரங்கற் குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. என். சிவராஜ் அவர்கள் 6-8-2001 அன்றும், திரு. வ. ஜார்ஜ் அவர்கள் 16-9-2001 அன்றும், திரு. பி. குழந்தை கவுண்டர் அவர்கள் 24-9-2001 அன்றும், திரு. எஸ். கிருஷ்ணன் அவர்கள் 3-10-2001 அன்றும், திரு. சி.டி. தண்டபாணி அவர்கள் 28-10-2001 அன்றும், திரு. சி. பாண்டுரங்கம் அவர்கள் 11-11-2001 அன்றும், தமிழக முன்னாள் அமைச்சரும், பேரவை முன்னாள் உறுப்பினருமான திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் 6-12-2001 அன்றும், பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. என். எஸ். பலராமன் அவர்கள் 20-12-2001 அன்றும், திரு. கே.டி.கே. தங்கமணி அவர்கள் 26-12-2001 அன்றும், தமிழக முன்னாள் அமைச்சரும், பேரவை முன்னாள் உறுப்பினருமான திரு. முகமது ஆசிப் அவர்கள் 12-1-2002

அன்றும், பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. பெ. மொக்கையன் அவர்கள் 25-2-2002 அன்றும், திரு. எல். பலராமன் அவர்கள் 26-2-2002 அன்றும், திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு அவர்கள் 7-3-2002 அன்றும் மறைவுற்றதை பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். சிவராஜ் அவர்கள் 1952 முதல் 1957 வரை நாகப்பட்டினம் பொதுத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. வ. ஜார்ஜ் அவர்கள் 1967 முதல் 1971 வரை பத்மநாபபுரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. பி. குழந்தை கவுண்டர் அவர்கள் 1957 முதல் 1962 வரை நாமக்கல் பொதுத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. எஸ். கிருஷ்ணன் அவர்கள் 1937 முதல் 1939 வரை மற்றும் 1947 முதல் 1952 வரை பொள்ளாச்சி பொது ஊரகத் தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றியுள்ளார்.

திரு. சி.டி. தண்டபாணி அவர்கள் 1996 முதல் 2001 வரை கோயம்புத்தூர் மேற்கு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டும், 1967 முதல் 1970 வரை, 1971 முதல் 1977 வரை மற்றும் 1980 முதல் 1984 வரை பாராளுமன்ற உறுப்பினராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டும் பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்.

திரு. சி. பாண்டுரங்கம் அவர்கள் 1971 முதல் 1976 வரை செங்கம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் 1967 முதல் 1978 வரை பாராளுமன்ற உறுப்பினராகவும், 1978 முதல் 1980 வரை தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், 1980 முதல் 1984 வரை பட்டுக்கோட்டை தொகுதியிலிருந்தும், 1991 முதல் 1996 வரை தஞ்சாவூர் தொகுதியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும், 1978-80, 1980-84 மற்றும் 1991-96 ஆகிய

ஆண்டுகளில் தமிழக வருவாய்த் துறை அமைச்சராகவும் திறம்பட பணியாற்றியுள்ளார்.

திரு. என்.எஸ். பலராமன் அவர்கள் 1971 முதல் 1976 வரை அரக்கோணம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நன்கு பணியாற்றியுள்ளார்.

திரு. கே.டி.கே. தங்கமணி அவர்கள் 1957 முதல் 1962 வரை பாராளுமன்ற உறுப்பினராகவும், 1971 முதல் 1976 வரை மதுரை மேற்கு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும் போற்றத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்.

முற்பகல் 10-05

திரு. முகமது ஆசிப் அவர்கள் 1991 முதல் 1996 வரை திருவல்லிக்கேணி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும், 1991 முதல் 1992 வரை ஊரகத் தொழில் துறை அமைச்சராகவும் சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. பெ. மொக்கையன் அவர்கள் 1980 முதல் 1984 வரை ராஜபாளையம் (தனி) தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. எல். பலராமன் அவர்கள் 1967 முதல் 1971 வரை கணியம்பாடி தொகுதியிலிருந்தும், 1980 முதல் 1984 வரை போளூர் தொகுதியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராக இருமுறையும், 1972 முதல் 1978 வரை தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் 1984 முதல் 1989 வரை, 1989 முதல் 1991 வரை மற்றும் 1996 முதல் 1997 வரை பாராளுமன்ற உறுப்பினராகவும் மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு அவர்கள் 1977 முதல் 1980 வரை சிங்காநல்லூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

இம்முன்னாள் உறுப்பினர்களின் மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [2002 மார்ச் 11

மறைந்த இப்பெரியவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரு மணித்துளிகள் அமைதிகாக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) ஜம்மு-காஷ்மீர் சட்டமன்றத்தின்மீது 1-10-2001 அன்று மற்றும் இந்திய நாடாளுமன்றத்தின்மீது 13-12-2001 அன்று நடைபெற்ற தீவிரவாதத் தாக்குதலில் பாதுகாப்புப் படையினர் மற்றும் ஏனைய அலுவலர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1-10-2001 அன்று ஜம்மு-காஷ்மீர் மாநிலச் சட்டமன்றத்தின்மீது நடைபெற்ற தாக்குதல் மற்றும் 13-12-2001 அன்று இந்திய நாடாளுமன்றத்தின்மீது நடைபெற்ற தீவிரவாதத் தாக்குதலில் தம் இன்னுயிரை இழந்தவர்களுக்கு இரங்கல் தீர்மானம்.

"1-10-2001 அன்று ஜம்மு-காஷ்மீர் மாநிலச் சட்டமன்றத்தின் மீதும், 13-12-2001 அன்று இந்திய ஜனநாயகத்தின் உயரிய அமைப்பான இந்திய நாடாளுமன்றத்தின் மீதும் நடத்தப்பட்ட தீவிரவாதிகளின் தாக்குதல்களை அறிந்து இப்பேரவை மிகவும் அதிர்ச்சி அடைகிறது. இத்தகைய தாக்குதல்கள் இந்தியத் திருநாட்டின் மீதும் இந்திய ஜனநாயகத்தின் மீதும் நடத்தப்பட்ட தாக்குதல்களாகவே இப்பேரவை கருதுகிறது. தீவிரவாதம் மற்றும் அதன் வன்முறைச் செயல்களை எந்தச் சூழ்நிலையிலும் இம்மண்ணில் எவராலும் ஏற்றுக்கொள்ள இயலாது. தீவிரவாதத்தின் எந்த ஒரு வடிவமும் அடியோடு வேரறுக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை இப்பேரவை உறுதி செய்கிறது. இச்சம்பவங்களின்போது தன்னலங்கருதாது தங்களது கடமையை நிறைவேற்றும் வேளையில் நாட்டின் பாதுகாப்பிற்காகத் தங்கள் இன்னுயிரை நீத்த பாதுகாப்புப் படையினர் மற்றும் ஏனைய அலுவலர்களின் மறைவுக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது."

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு